## மே – 30 – புதன்
### புனித ஜோன் ஒப் ஆர்க்
### எருசலேமே! ஆண்டவரைப் போற்றுவார்களாக! திபா. 147:12

### முதல் வாசகம் : 1 பேதுரு 1 : 18 – 25

அன்புக்குரியவர்களே! உங்கள் மூதாதையரிடமிருந்து வழிவழியாய் வந்த வீணான நடத்தையினின்று உங்களை விடுவிக்கக் கொடுக்கப்பட்ட விலை என்னவென்று உங்களுக்குத் தெரியும். அது பொன்னும் வெள்ளியும் போன்று அழிவுக்குட்பட்டது அல்ல. மாறாக, மாசு மறுவற்ற ஆட்டுக் குட்டியைப் போன்ற கிறிஸ்துவின் உயர்மதிப்புள்ள இரத்தமாகும்.உலகம் தோன்றுமுன்னரே முன்குறிக்கப்பட்ட அவர், இந்தக் கடைசிக் காலத்தில் உங்களுக்காக வெளிப்படுத்தப்பட்டார்.அவர் வழியாகத்தான் நீங்கள் கடவுள்மீது நம்பிக்கை கொண்டுள்ளீர்கள். இறந்த அவரைக் கடவுள் உயிர்த்தெழச் செய்து பெருமைப்படுத்தியுள்ளார். இதனால் நீங்கள் கடவுளிடம் நம்பிக்கை கொண்டு அவரை எதிர்நோக்கி இருக்கவே இவ்வாறு செய்தார்.உண்மைக்குக் கீழ்ப்படிந்து உங்கள் ஆன்மா தூய்மை அடைந்துள்ளதால் நீங்கள் வெளிவேடமற்ற முறையில் சகோதர அன்பு காட்ட முடியும். எனவே நீங்கள், தூய உள்ளத்தோடு ஒருவருக்கொருவர் ஆழ்ந்த அன்பு காட்டுங்கள். நீங்கள் அழியக்கூடிய வித்தினால் அல்ல் மாறாக, உயிருள்ளதும், நிலைத்திருப்பதுமான, அழியாவித்தாகிய கடவுளின் வார்த்தையால் புதுப்பிறப்பு அடைந்துள்ளீர்கள்.ஏனெனில், ”மானிடர் அனைவரும் புல்லைப் போன்றவர் அவர்களது மேன்மை வயல்வெளிப் பூவைப் போன்றது புல் உலர்ந்ததுபோம் பூ வதங்கி விழும். நம் ஆண்டவரின் வார்த்தையோ என்றென்றும் நிலைத்திருக்கும். ”இவ்வார்த்தையே உங்களுக்கு அறிவிக்கப்பட்ட நற்செய்தி.

**பதில்பாடல் :** எருசலேமே ஆண்டவரைப் போற்றுவாயாக

### நற்செய்தி : மாற்கு 10 : 32 – 45

அக்காலத்தில் சீடர்கள் எருசலேமுக்குப் போகும்வழியில் சென்றுகொண்டிருந்தார்கள். இயேசு அவர்களுக்குமுன் போய்க்கொண்டிருந்தார். சீடர் திகைப்புற்றிருக்க, அவரைப் பின்பற்றிய ஏனையோர் அச்சம் கொண்டிருந்தனர். அவர் மீண்டும் பன்னிருவரை அழைத்துத் தமக்கு நிகழவிருப்பவற்றைக் குறித்துப் பேசத் தொடங்கினார்.அவர், ”இப்பொழுது நாம் எருசலேமுக்குச் செல்கிறோம். மானிடமகன் தலைமைக் குருக்களிடமும் மறைநூல் அறிஞர்களிடமும் ஒப்புவிக்கப்படுவார் அவர்கள் அவருக்கு மரண தண்டனை விதித்து அவரைப் பிற இனத்தவரிடம் ஒப்புவிப்பார்கள்அவர்கள் ஏளனம் செய்து, அவர்மீது துப்பி, சாட்டையால் அடித்து அவரைக் கொலை செய்வார்கள். மூன்று நாள்களுக்குப்பின் அவர் உயிர்த்தெழுவார்” என்று அவர்களிடம் கூறினார்.செபதேயுவின் மக்கள் யாக்கோபும் யோவானும் அவரை அணுகிச்சென்று அவரிடம், ”போதகரே, நாங்கள் கேட்பதை நீர் எங்களுக்குச் செய்யவேண்டும் என விரும்புகிறோம்” என்றார்கள்.அவர் அவர்களிடம், ”நான் என்ன செய்யவேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள்?” என்றுகேட்டார்.அவர்கள் அவரை நோக்கி, நீர் அரியணையில் இருக்கும்போது எங்களுள் ஒருவர் உமது வலப்புறமும் இன்னொருவர் உமது இடப்புறமும் அமர்ந்து கொள்ள எங்களுக்கு அருளும்” என்றுவேண்டினர்.இயேசுவோ அவர்களிடம், ”நீங்கள் என்ன கேட்கிறீர்கள் என உங்களுக்குத் தெரியவில்லை. நான்குடிக்கும் துன்பக்கிண்ணத்தில் உங்களால் குடிக்க இயலுமா? நான்பெறும் திருமுழுக்கை உஙகளால் பெற இயலுமா?” என்றுகேட்டார்.அவர்கள் அவரிடம், ”இயலும்” என்று சொல்ல, இயேசு அவர்களை நோக்கி, ”நான் குடிக்கும் கிண்ணத்தில் நீங்கள் குடிப்பீர்கள். நான் பெறும் திருமுழுக்கையும் நீங்கள் பெறுவீர்கள்.ஆனால் என் வலப்புறத்திலும் இடப்புறத்திலும் அமரும்படி அருளுவது எனது செயல் அல்ல. மாறாக அவ்விடங்கள் யாருக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதோ அவர்களுக்கே அருளப்படும்” என்றுகூறினார்.இதைக் கேட்டுக ொண்டிருந்த பத்துப்பேரும் யாக்கோபுமீதும் யோவான்மீதும் கோபங்கொள்ளத் தொடங்கினர்.இயேசு அவர்களை வரவழைத்து அவர்களிடம், ”பிற இனத்தவரிடையே தலைவர்கள் எனக் கருதப்படுகிறவர்கள் மக்களை அடக்கி ஆளுகிறார்கள். அவர்களுள் பெரியவர்கள் அவர்கள் மீது தங்கள் அதிகாரத்தைக் காட்டுகிறார்கள்.ஆனால் உங்களிடையே அப்படி இருக்கக் கூடாது. உங்களுள் பெரியவராக இருக்க விரும்புகிறவர் உங்கள் தொண்டராய் இருக்கட்டும்.உங்களுள் முதன்மையானவராக இருக்க விரும்புகிறவர், அனைவருக்கும் பணியாளராக இருக்கட்டும். ஏனெனில் மானிடமகன் தொண்டு ஏற்பதற்கு அல்ல, மாறாகத் தொண்டு ஆற்றுவதற்கும் பலருடைய மீட்புக்கு ஈடாக தம் உயிரை கொடுப்பதற்கும் வந்தார்” என்று கூறினார்.

**தியானம் :** வார்த்தை வடிவில் மனுவுரு எடுத்து எங்கள் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் இறைமகன் இயேசு தனக்கு ஏற்படப்போகும் நிந்தனைகள், அவமானங்கள், துயரங்கள் யாவற்றையும் அறிந்தவராய் ஏற்கனவே தனது சீடர்களுக்கு தனது மரணத்தை முன்னறிவிக்கின்றார். அதேபோன்று எமது பாவங்களுக்காக, பலவீனங்களுக்காக, இயலாமைகளுக்காக யாவற்றையம் ஏற்று இறுதியில் தனது உயிரைக் கொடுத்து புதுவாழ்வு அருளினார். எனவேதான் தான் எவ்வாறாக தூயவராகவும் மாசுமறுவற்றவராகவும் இருக்கின்றேனோ அதேபோன்று எங்களையும் தூயமனத்துடன் வாழ அழைக்கின்றார். “நீங்கள் தூயவராக இருங்கள் ஏனெனில் நான் தூயவன்” (1பேது.1:16). ஆனால் நாங்கள் வாழும் வாழ்வானதோ பாவம் நிறைந்ததும், அருவருப்பானதும், பகைமை உணர்வு கொண்டதும், விட்டுக்கொடுக்காத மனநிலை கொண்டதுமாக இருக்கின்றது. ஆனால் அவர் விரும்புவது அன்பு கொண்டுள்ள தூய்மையான உள்ளத்தையே எனவே முதலில் எமது குடும்பத்தில் அன்பை ஏற்படுத்துவோம், பின்பு அயலவர், நண்பர், உறவினர்கள் என்று அன்பை பகிர்ந்து கொள்வோம். எனவே உயிர்த்த இயேசு எம் உள்ளத்தில் வந்து தங்குவதற்கு இறைவார்த்தையை வாசித்தவர்களாக அதன்படி வாழ்வோம், புதுப்படைப்பாக மாறுவோம். “நீங்கள் அழியக்கூடிய வித்தினால் அல்ல மாறாக உயிருள்ளதும், நிலைத்திருப்பதுமான அழியா வித்தாகிய கடவுளின் வார்தையால் புதுப்பிறப்படைந்துள்ளீர்கள். (1பேது.1:23)